*News and Articles in Tamil and English Please send them to:*

**THE EDITOR,**

The Morning Star,
Diocesan Office,
Vaddukoddai

# THE MORNING STAR

Registered as a Nespaper at the General Post Office, Sri Lanka
Under No.Q / J / 104 / News / 89
*Established : 1841 : A Christian Weekly : Published Every Friday*
Vol. 156 Jaffna, Friday, 05 May 1995 No. 18
RIGHTEOUSNESS EXALTETH A NATION BUT SIN IS A REPROACH TO ANY PEOPLE

Subscription
Island : Rs.100/-
*For Advertisements*

*Apply to:*
**THE MANAGER**

The Morning Star,
Diocesan Office,
Vaddukoddai

## What we owe to John Bunyan



John Bunyan was one of the most important writers, of the Puritan movement of the 17th century, England.

His book "The Pilgrims Progress' was introduced into Jaffna Society by the American Missionaries who came here in 1816. In their collegiate institution (Batticotta Seminary) they taught Pilgrims Progress with much enthusiasm. They also taught the works of John Milton. But they did not give much importance to the works of Shakespeare and William Wordsworth

Rev. Levy Spaulding who came to Jaffna in 1820 translated Pilgrims Progress into Tamil. The title he gave for this translation was 'Parathesiyin Morchcha Pirayanam'. This translation is now preserved in the British Museum Library.

Poet H. A Krishnapillai read this translation and was inspired to render this work in verse. H A. Krishnapillai's translation was called "Redchaniya Yath-rikam" இரட்சணிய யாத்திரிகம்.

John Bunyan was born in 1628 and died in 1688. He was the son of poor parents of Elstow in Bedfordshire. His father was a Tinker. It appears that John also followed his trade.

John Bunyan probably acquired his knowledge and mastery of the English language from reading the Bible. He took part in the Civil War on the Parliamentary side (1644-1646).

In 1649 he married a woman of piety who introduced him to A Dent's "Plain man's path way to heaven." The book of common prayer "The Practice of Piety" by Bishop Bayly and "Book of Martyrs" by John Fox seem to have been his sole reading.

In 1653 John Bunyan was received into an Independent Congregation at Bedford and was soon recognised as a Preacher. He suffered much from the repressive measures of the Royalists after the restoration of 1660 and spent most of the years 1660 - 72 in Bedford Jail. During and after his imprisonment he wrote extensively including some verse compositions. The following are the important prose works of John Bunyan: 'Grace abounding to the chief sinners, The Pilgrims Progress, The Holy War'. After his release from Prison in 1672 he worked among the Independents at Bedford and took a keen interest in evangelistic work. One of his last writings 'Anti-Christ & her ruin' was published posthumously. For John Bunyan this world was exclusively the scene of a spiritual warfare and nothing mattered except the salvation of the soul.

---

## A Service of Thanksgiving

A service to thank God for the life and work of William Gnanasigamany Annappah (Retired Principal Memorial English School Manipay) was conducted on Sunday the 9th of April, 1995 at The C. S. I Church Navaly at 4.00 pm. The Service was led by The Rev. V. N. Tharmakulasingam. The tribute and sermon was given by the Rev. D R. Ambalavanar. The lessons were read by M/S A. Jeyaseelan and A Jeyarajan. The Litany of praise was offered by the Rev. A. Jeyakumaran. At the end of the service the memorial tablet in the Navaly church was unveiled by the Rt. Rev. D. J. Ambalavanar. The Bishop pronounced the benediction

## Words of Wisdom for Peacemakers

*(We quote below some extracts from Herbert Butterfield's 'Christianity and History' published in 1949, which are relevant to those involved in conflict resolutions. Prof. Butterfield was Professor of Modern History at Cambridge)*

Each of us more or less are restricted to a narrow vision, gravely conditioned by time, temperament and age, and by the platform on which we happen to be standing. The most friendly foreign offices, the most friendly historians belonging to different nationalities, find somewhere or other the place where they cannot enter into one another's point of view. The Marxists are right when they assume that a member of a certain social class, even if he is unselfish, is liable to be limited in his outlook by the fact that he sees things from the platform of that social class.

We may think that we have a spacious vision, level and equal as it takes in wide horizons but in reality each of us looks upon the world from a special peep-hole of his own. Where actual interests complicate a question and a certain amount of wishful thinking may give a bias to our minds, it is doubtful whether it is possible for any of us to survey a problem comprehensively. And it is certain that we fail to realise our incompetence in an art that is of the greatest importance for human relations - the simple art of putting ourselves in the other person's place.

The situation is still further complicated by a certain human predicament which we are too seldom conscious of, and which I can only call the predicament of Hobbesian fear - Hobbesian because it was subjected to particular analysis by the seventeenth - century philosopher, Thomas Hobbes. If you imagine yourself locked in a room with another person with whom you have often been on the most bitterly hostile terms in the past, and suppose that each of you has a pistol, you may find yourself in a predicament in which both of you would like to throw the pistols out of the window, yet it defeats the intelligence to find a way of doing it. If you throw yours out the first you rob the other man of the only reason he had for getting rid of his own, and for anything you know he may break the bargain. If both of you swear to throw the pistols out together, you may feel that he may make the gesture of hurling his away, but in reality hold tight to it, while you, if you have done the honest thing, would then be at his mercy. You may even have an arriere - pensee ( mental reservation ) that he may possibly be concealing a second pistol somewhere about his person. Both of you in fact may have an equal justification for suspecting one another, and both of you may be men who in all predicaments save this had appeared reasonably well-behaved and well-intentioned. You may both be utterly honest in your desire to be at peace and to put an end to the predicament, if only in order to enable you to get on with your business. If some great bully were to come into the room and try to take your pistols from you, then as likely as not you would both combine against him, you would find yourselves cherished allies, find yourselves for the time being as thick as thieves. Only, after you had eliminated the intruder, you would discover to your horrible surprise that you were back in the original predicament again.

(Continued on page 4)

# வாழும் எழுத்துக்கள்



திரு. வி. கலியாணசுந்தர முதலியார் எழுதியது

## மலைப்பொழிவு

கிறிஸ்துவைப் பற்றியும், அவர் தம் போதனையைப் பற்றியும் பிறந்த எதிர்ப்புக்களும், எழுந்த மறுப்புக்களும்,. ஒன்றல்ல. இரண்டல்ல. ஆயிரக்கணக்கில் பிறந்தன. எழுந்தன. அவைகளிற் சிலவற்றை யான் படித்தும் இருக்கின்றேன் கேட்டும் இருக்கின்றேன். அவைகளால் என்மனம் கிறிஸ்துவை விடவோ அவர் தம் போதனையை ஒதுக்கவோ எண்ணியதில்லை. கிறிஸ்து என்ற ஒருவர் தோன்றியதில்லை. என்றும், அவரைப்பற்றிய கதைகளெல்லாம் பின்னே புனையப்பட்டன என்றும் சொல்வோரும், கிறிஸ்து அரசியலார் என்றும் தாம் நினைத்த வண்ணம் புரட்சி நிகழாமையால் தீர்க்கதரிசியாக அவர் நடித்தார் என்றும் கூறுவோரும், கிறிஸ்து தெய்வத்தினிடமிருந்து இறங்கிய பிள்ளை அல்ல என்றும், அவர் நபிமாருள் ஒருவர் என்றும் உரைப்போரும் கிறிஸ்து ஆண்டவன் அருளால் அபிஷேகம் செய்யப்பெற்ற. ஒரு சீவன்முக்தர் என்றும். அந்நிலையை அடையும் உரிமை எவர்க்கும் உண்டென்றும். ஒருவரையே கிறிஸ்து என்று கொள்ளுதல் தவறு என்றும், புகழ்வோரும், கிறிஸ்து கொல்லப்படவில்லை என்றும், அவர் மீண்டும் உயிர்த்தெழவில்லை என்றும், பகர்வோரும், கிறிஸ்துவின் போதனைகள் அவர் காலத்தில் எழுதப்படவில்லை என்றும், பின்னே எழுதப்பட்டன என்றும், அவைகளில் கூட்டல் குறைத்தல் நேர்ந்திருக்கும் என்றும் நவில்வோரும் உளர். இன்னும் பலவாறு ஓதுவோரும் இருக்கிறார்கள். இவைகள்யாவும் ஆராய்ச்சி என்னும் மயக்க அறிவினின்றும் பிறந்தவை. கிறிஸ்துவையும் அவர் தம் போதனையையும் குறை கூறிவந்தவருள் சிலர் பின்னே அவர் அடியவராய் அவர் வாய்மொழியின் வழிநின்று ஒழுகுவோராயதை யான் நன்கு அறிவேன். எவர் என்ன கூறினுங் கூறுக. யான் கவலையுறேன். கிறிஸ்து பெருமான் அன்பு வடிவை நினைக்க நினைக்க, அவர் தம் மெய்ம்மை அமைதி முதலிய நறுங்குணங்கள் படிதல் உண்மை என்பதும். பகைவரையும் நேசிக்கும் பான்மை - அந்தண்மை - பிறத்தல் உண்மை என்பதும் உள்ளங்கை நெல்லிக்கனியென விளங்குவது பெறலாம். கிறிஸ்து பெருமான் மலைப்பொழிவில் ஈடுபடப்பட அஃது அறுபகையைக் களைந்து அன்பு விளைத்தல் வெள்ளிடைமலையெனக் காணலாம். அப்பொழிவில் ஈடுபட்டவர்க்கே உண்மை தெரியும். மலைப்பொழிவில் என்ன இல்லை? உலகிலுள்ள சமயங்களின் சாரமெல்லாம் திரண்டு அதன் கண் தேங்கி நிற்கின்றன. அத்தகைப் பொழிவு சமரச சன்மார்க்கமுடையதென்று என் வாழ்வில் தெளிவாயிற்று.

—திரு. வி. க. வாழ்க்கைக் குறிப்பு

# வருடாந்த வாலிபர் பாசறை 1995

"சமாதானத்திற்கும் நீதிக்கும் தம்மை அர்ப்பணிக்கும் ஓர் புதிய விசுவாச சமுதாயத்தை உருவாக்கல்" எனும் மகுட வாக்கியத்தில் இவ்வருட பாசறை ஒழுங்கு செய்யப்பட்டு கிறிஸ்தவ சேவ ஆச்சிரமத்தில் ஏப்ரல் மாதம் 22 - 24 திகதிகளில் நடைபெற்றது

22. 4 95 காலையில் பெயர்களைப் பதிவு செய்த பின்னர் ஆச்சிரமத்தில் ஆராதனை நடைபெற்றது. அதில் இவ்வாண்டிற்கான மகுட வாக்கியத்தில் சிறப்பம்சமான சமாதானம், நீதி என்பவற்றைத் தெளிவுபடுத்த மீகா 6:8ஐ மையமாகக் கொண்டு அருட்திரு. டி. எஸ். தியாகராஜா அவர்கள் அருளுரையாற்றினார். பின்னர் அன்பு. நீதி, சமாதானம் எனும் பெயர் சூட்டப்பட்ட மூன்று குழுக்களாக வாலிபர் பிரிக்கப்பட்டனர். அதனைத் தொடர்ந்து கத்தோலிக்க திருச்சபையை சேர்ந்த ஜீவா போல் அடிகளார் நீதி சமாதானம் நிறைந்த ஒருசமூகத்தைக் கட்டியெழுப்புதல் என்ற தலைப்பின் கீழ் சிறப்புரையாற்றினார். மெதடிஸ்த திருச்சபையைச்சேர்ந்த ரெனிஸ் போதகர் அவர்களால் சமாதானத்தினை நிலைநாட்ட முதலில் நீதியையும், அநீதியையும் பகுத்தறிதல் எனும் கருத்தின் அடிப்படையில் வேதப் படிப்பை நடாத்தினார்.

23.4- 95 அன்று ஆச்சிரமத்தில் ஞாயிறு காலை ஆராதனை அருட்திரு சாம் அல்பிரட் அவர்களால் அருட்திரு. எஸ். ஐ. ஆனந்தராஜன் அவர்களின் உதவியுடன் நடைபெற்றது அன்று உயிர்த்த ஆண்டவர் தோமாவிற்கு காட்சியளித்த நாள் ஆகையால் அருளுரை அதனையே மையமாகக் கொண்டு ஆற்றப்பட்டது பின்னர் தியாகராஜாப் போதகர் அவர்களால்ஒருவனுடையபொருட்கள் உரிமைகள்மீது ஆதிக்கம் செய்வதை விடுத்து உரியவனுக்கு உரியதைக்கொடுத்து விடுவதன் மூலம் நீதி பேணப்படும் என்ற பொருளில் உரை நிகழ்த்தப்பட்டது, தொடர்ந்து எமது பேராயர் அருட்திரு கலாநிதி ஜெபநேசன் அவர்கள் "நீங்களும் பேச்சாளராகலாம்" எனும் தலைப்பில் ஒரு கருத்தரங்கை நடாத்தியது வாலிபருக்கு பிரயோசனமாக இருந்தது. மாலை நிகழ்வில் அருட்திரு ஏ.ஏ. போல் அவர்கள் இயற்கையும் சமூகமும் என்ற பொருளில் மனிதன், இயற்கை தனது வளங்களை வெளிக்கொணராதவாறு அடக்கிப் போடுகிறான் என்றும் அதனால் ஏற்படும் அநீதி விளைவுபற்றியும்விளக்கிகூறினார் வாலிபர்களும் அது பற்றி தமது சந்தேகங்களைத் தீர்த்துக் கொண்டனர்.

24. 4. 95 ஆச்சிரம ஆராதனையில் ஓய்வு பெற்ற எமது பேராயர் பேரருட்திரு அம்பலவாணர் அவர்கள் பங்கு கொண்டு, கடவுள் மனிதனுக்கு பூமியில் கொடுத்த சுதந்திரத்தின் பலனாக அவன் படைப்பின் கர்த்தாவை மீறி தனது ஆய்வுகளை மேலும், இயற்கைக்கு மாறான செயற்கை முறையில் அமைத்து வருகிறான். இவ்வாறு தனது ஆற்றலால் முன்னேறிய மனிதன் முன்னேறாதோரை அடக்கியாளும் நிலை ஏற்படுகிறது: இதனால் பொருளாதார அடக்குமுறை போன்ற அடக்குமுறைகள் தலைதூக்க நீதியின் கிரியையாகிய சமாதானம் அற்றுப்போகிறது. அத்துடன் மனிதன் இயற்கைக்கு சவால் விடுபவனாக 20ம் நூற்றாண்டில் வாழ்ந்து கொண்டிருக்கிறான் என்றும் இதனால் ஏற்படும் விபரீத விளைவுகள் பற்றியும் திருமறையூடாகச் சுட்டிக்காட்டினார். அருட்திரு. வி. இராஜ்குமார் அவர்கள் நீதியின் பலன், அநீதியின் விளைவு பற்றிக் கூறி கடவுள் கட்டளைக்கு கீழ்ப்படிவதே நீதி என்றும் மனிதன் முழுமனிதனாக வாழ்வதற்கு சுகவாழ்வுடன் இருக்க தடையான ஏது அநீதியென திருமறையூடாக எடுத்துக்காட்டி கிறிஸ்தவர்கள் அழைப்பின் நோக்கம் எதுவெனக் காட்டி நிறைவாக மானிடவாழ்க்கை கிறிஸ்து இயேசுவின் முழுமையைப் பெறுவதே என வலியுறுத்திக் காட்டினார்.

இவ்வாறாக சமயக் கல்விக்குழு தமது சிரமத்தையும் பாராது பலரையும் அழைத்து எமக்கு இம்முறைக்கான மகுட வாக்கியத்தினை திருமறை ஊடாகப் பல கோணங்களிலும் காட்டிப் புரியவைத்தது மாத்திரமல்லாது சமயக் கல்விக் குழு இயக்குனர் திருமதி தயா தியாகராஜா அவர்கள் வாலிபரிடையே வேதாகம அறிவை வளர்ப்பதற்காக ஏனைய நேரங்களையும் ஆதாயமாக்கிக் கொடுத்தார். அதற்கு இறையியல் கல்லூரி மாணவர்களும் அளப்பரிய பங்காற்றினர். சகல விதத்திலும் உதவிபுரிந்தனர். "இயேசுவும் சீடர்களும் நீதியை, சமாதானத்தினை நிலைநாட்டினார்களா?" எனும் ஆய்வினை வாலிபர்களிடையே நிகழ்த்தினார்கள். வேதாகமப் புதிர்ப்போட்டிகள் நடைபெற்றன. விளையாட்டு நேரங்களிலும் சாதாரண விளையாட்டுகள் போலல்லாது வேதாகமனத்தினுள்ளேயே வாலிபர்கள் சிந்திக்கும்படியாக ஒழுங்குசெய்யப்பட்டிருந்தன.

ஓய்வு நேரங்களில் சிறந்த பாடல்களைப் பிரதியாக்கம் செய்து தந்து

(3-ம் பக்கம் பார்க்க)

நீதி ஜனத்தை உயர்த்தும் பாவமோ
எந்த ஜனத்துக்கும் இகழ்ச்சி.

# உதயதாரகை

ஆதீன காரியாலயம், வட்டுக்கோட்டை
Estd. 1841
மலர்: 156 05-05-1995 இதழ்: 18

## "கர்த்தர் இம்மட்டும் எங்களுக்கு உதவி செய்தார்"

பெலிஸ்தியருக்கு எதிரான போரிலே இஸ்ரவேலரைக் காப்பாற்றிய தேவனைக் குறித்து சாமுவேல் இவ்வாறு அறிக்கை செய்தான். அவன் இதனைக் குறிக்குமுகமாக மிஸ்பாவுக்கும் ஷேனுக்கும் நடுவே ஒரு கல்லை நிறுத்தி அதற்கு எபனேசர் என்று பேரிட்டார். எபனேசர் என்பது உதவியின் கல் என்பதாகும்.

இன்று நம்மை யுத்த மேகங்கள் மீண்டும் சூழ்ந்து நிற்கின்றன. நாளுக்கு நாள் சண்டைகள் தீவிர மடைந்து வருவதாகப் பத்திரிகைகள் குறிக்கின்றன. மக்கள் பலர் ஏக்கமடைந்து போயிருக்கின்றனர். இனி என்ன ஆகுமோ? என்ற வினா எல்லாருடைய உள்ளத்திலும் உருவெடுக்கின்றது.

இந்தச் சூழலில் நாம் இறைவனையே பற்றுக்கோடாகக் கொண்டிருந்தால் நாம் ஒன்றைக் குறித்தும் அஞ்சத் தேவையில்லை. இஸ்ரவேல் புத்திரர் வாழ்விலே எத்தனை 'சோகம்?

அந்நியர் படையெடுப்பு இளைஞர் கைதிகளாக்கப் படுதல் தேவாலயச் சீரழிவு ஆனால் இஸ்ரவேற் புத்திரர் ஒரு பொழுதும் மனவுறுதியை இழக்கவில்லை. அவர்களுடைய தீர்க்கதரிசிகள் கடவுள் மேல் நம்பிக்கையாயிருங்கள் உங்களுக்கு ஒரு தீங்கும் ஏற்படாது என்றே கூறி வந்தனர் உணர்ச்சிகளையெல்லாம் சங்கீதகாரர் எவ்வளவு அருமையாக எடுத்து விளக்குகின்றார் என்று பாருங்கள்

'இரவில் உண்டாகும் பயங்கரத்துக்கும்
பகலில் பறக்கும் அம்புக்கும்
இருளில் நடமாடும் கொள்ளை நோய்க்கும்
மத்தியானத்தில் பாழக்கும் சங்காரத்திற்கும்
நீ பயப்படாதிருப்பாய்
உன் பக்கத்தில் ஆயிரம் பேரும்
உனது வலது புரத்தில் பதினாயிரம் பேரும்
விழுந்தாலும் அது உன்னை அணுகாது''

கடவுள் மேல் நம்பிக்கையாய் இருக்கின்ற மனுஷன் பாக்கியவான். அவனை இறைவன் எல்லா இடுக்கண்களிலிருந்தும் விடுதலையாக்குவார். இதனை நம்நாட்டு கவிஞராகிய சுப்பிரமணிய பாரதி

'தெய்வம் நமக்குத் துணையுண்டு பாப்பா — ஒரு
தீங்கு வரமாட்டாது பாப்பா

என்று பாடினார்

ஆகையால் இந்த இக்கட்டான சூழலில் கடவுளைப் பூரணமாக நம்புவதே நாம் செய்யவேண்டிய கடமையாகும். 'அவர் உங்களை விசாரிக்கிறவர்' ஆகியபடியினாலே உங்கள் கவலைகளை அவர் மேல் வைத்துவிடுங்கள்' என்று பேதுரு தமது நிருபத்தில் எழுதியுள்ளான்.

பூமி நிலைபெயரலாம் மலைகள் நிலைமாறலாம் ஆனால் நாமோ நிலைகுலையத் தேவையில்லை. அன்பு நிறைந்த தெய்வம் உண்டு - துன்பம் அத்தனையும் போக்கிவிடும் என்று பூரணமாய் நம்புவோமாக. இருள் சூழ்ந்த இக்காலத்தில் இறைவன் உங்களை தமது பராமரிப்பின் கீழ் வைத்துக் கொள்வார்.

## வருடாந்த வாலிபர்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

பயிற்றினார்கள். பாசறையை எந்நேரமும் உற்சாசமான முறையில் வைத்திருக்கும் படியான செயற்பாடுகள் எடுக்கப்பட்டன. இறுதி நேரம்வரை ஆனல்ட் போதகரும் போல் போதகரும் தியாகராஜாப் போதகருமாக வாலிபர்களின் சந்தேகங்களை ஆவலுடன் எதிர்கொண்டு விளக்கங்களை அளித்தனர். மேலும் வாலிபர்கள் தங்கள் திருமறைகளை வெளிக்காட்டுவதற்கென நாடகம், பாடல் போன்ற போட்டிகள் வைக்கப்பட்டு வாலிபர் ஊக்குவிக்கப்பட்டனர். குழுக்களுக்கிடையேயான ஐக்கியத்திற்கு அங்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. இயக்குனர் அவர்களின் வழிகாட்டலுடன் தமிழாக்கம் செய்யப்பட்ட 'எல்சல்வடோர் திரைப்படம் காண்பிக்கப்பட்டது. அதில் ஆர்ச்பிஷப் ஒஸ்கார் றொமேதோ அவர்களின் வாழ்வும் பணியும் காட்டப்பட்டது உண்மையிலேயே அது அனைத்து வாலிபர்களையும் சிந்திக்கத் தூண்டிற்று இதனால் விழித்துக்கொண்ட எமது வாலிபர்கள் அது பற்றிய பல கேள்விகளையும் ஆய்வின் ரீதியில் எழும்பித் தமது சந்தேகங்களைத் தீர்க்க வழிகள் செய்யப்பட்டன. இம்முறைக்கான பாசறைத் தீவைபவதில் வெளியிடங்களில் இருந்து பலரும் வந்து சிறப்பித்தனர்.

நற்செய்திப்போதனைகள் மூன்று நாட்களும் தொடர்ந்து நிகழ்ந்த போதும் பந்திவிசாரனையில் குறைவுகள் காணப்படவில்லை சிறந்த முறையில் தயாரிக்கப்பட்ட உணவுகள் பரிமாறப்பட்டன. சிறப்புரைகளுக்கிடையே அருட்திரு மில்ட்டனும் தேவமித்திரன் ஆசிரியரும் இணைந்து பாடற் பயிற்சி அளித்தனர்.

இவ்வாறாக எமது நேரங்களை மண்ணாக விடாது அயராது சிரமத்தையும் பொருட்படுத்தாது உழைத்த சமயக் கல்விக் குழுவின் பாசறை நோக்கை வாலிபர்களாகிய நாம் உணர்ந்துள்ளோம் என நம்பி சமயக்கல்விக் குழுவிற்கு நன்றியுடையோராய் வாழவும் மேலாக எம்மை கிறிஸ்து இயேசுவுக்குள் வளர்த்துக்கொள்ளவும் மூன்று நாள் போதனைகளுக்கூடாக தூய்மையாக்கப்பட்ட வெள்ளாட்டுக் குட்டிகளாய் உலகினுள் சென்று செயற்படக்கடமைப் பட்டுள்ளோம் நீதியின் நிமித்தம் துன்பப்படுகின்றவர்கள் பாக்கியவான்கள் பரலோகராஜ்யம் அவர்களுடையது' 'சமாதானம்பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள். தேவனுடைய புத்திரர் எனப்படுவார்கள்'. எனவே கிறிஸ்துவின் நிமித்தம் வாலிபர்களாகிய நாமும் உலகிலே வரும் நிந்தனைகளையும் தீதான மொழிகளையும் சகித்து பாக்கியவான்ளாக இருப்போமாக.

செல்வி மில்கா இரத்தினசபாபதி
உடுப்பிட்டி திருச்சபை

## திருவும் அருள்திருவும்



திரு: திருமணங்கள் சொர்க்கத்தில நிர்ணயிக்கப்படுகின்றன என்று சொல்லுகிறீர்கள் அப்படியானால் ஏன் திருமண வாழ்க்கை விரைவில் நரக வாழ்க்கையாகி விடுகின்றது?.

அருள்திரு: திருமணங்கள் சொர்க்கத்தில் நிர்ணயிக்கப்படும் ஆனால் திருமணம் செய்து கொள்பவர்கள் தேவர்களும் தேவதைகளும் அல்லவே சாதாரண பூலோகப் பெண்களும் ஆண்களுமதானே அது தான் சொர்க்கத்தில் நிர்ணயிக்கப்பட்டவை, விரைவில் நரகமாகிவிடுகின்றது.

## மரணம்

உடுப்பிட்டி சபையைச் சேர்ந்தவரும் முன்னாள உடுப்பிட்டி மகளிர் கல்லூரியின் அதிபருமான திருமதி பாக்கியலட்சுமி இராஜேந்திரசிங்கம் அவர்கள் கொழும்பிலுள்ள மருத்துவமனையில் நீண்ட நாள் சுகயீனமாகவிருந்து 4.4 95 செவ்வாய்க்கிழமை அன்று காலமானார். இவரது பூதவுடல் நல்லடக்கத்திற்காக கொழும்பிலுள்ள கனத்தை மயானத்தில் 5.4 95 புதன்கிழமை மாலை 3 30 மணிக்கு அடக்கம் செய்யப்பட்டது.

இவரது மறைவையொட்டி புதன்கிழமை 5.4.95 அன்று மாலை 3.30 மணிக்கு சபைப் போதகரால் ஓர் ஸ்தோத்திர ஆராதனை (மகளிர் கல்லூரி உடுப்பிட்டி) வைக்கப்பட்டது இவ்வாராதனையில் அதிபர். ஆசிரியர்கள், மாணவர்கள், திருச்சபை அங்கத்தவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். ஆசிரியர்களும் அதிபரும் மறைந்த அதிபரைக் குறித்து இரங்கலுரை ஆற்றினார்கள். 11.4.95 அன்று மறைந்த அதிபர் அவர்களது இல்லத்தில் ஓர் ஜெபக் கூட்டம் மாலை 4.30 மணிக்கு சபைப் போதகர் அ அசோக்குமாரால் நடாத்தப்பட்டது

## வாசகர் கவனத்திற்கு

தவிர்க்க முடியாத சில காரணங்களினால் உதயதாரகை தமிழ்;ஆங்கிலப்பகுதிகள் சில வாரங்களுக்கு இரண்டு பக்கங்கள் மட்டுமே வெளிவரும்

# The Morning Star

**Diocesan Office, Vaddukoddai** **05 . 05. 1995**


## *EDITORIAL*

## Life Giving Power of God

The unlimitedness of the power of God is seen in the resurrection of Jesus. Jesus was crucified and was dead. There was no life in his body but he became alive again on the third day. He gave us a new hope i. e. as life giving spirit, the Living Christ will raise up all those who are dead. All what God expects from us all is to trust in His Life Giving power.

Jesus said God is the God of Abraham, Isaac and Jacob; He is the God of the **living** and not of the **dead**. God brought life out of a dead ( barren ) womb. So God is not only the God of the living but also the life giving spirit. God called a man called **Abram** and his wife **Sarai**. They were childless. When God called them, Abram was too old to produce an offspring and Sarai was barren. But God promised that He would make Abram a father of nations and so he called them Abraham and Sarah. God gave life to the dead ( barren ) womb of Sarah and a son - Isaac– was born. To Isaac was born Jacob ( Israel ).

The very existence of the nation, Israel is the manifestation of the life giving power of God. Though Israel was a very insignificant race, God brought them out of the Egyptian bondage into the land of Canaan, the promised land flowing with milk and honey. The credo of the Israelites is " A wandering Aramaian was my father; he went down to Egypt and so journed there, few in number; Egyptians treated us harshly and afflicted us – the Lord brought us out with a mighty arm, with great terror and with signs and wonders " **Deut 26: 5-11** .

Even in Canaan, there were many enemies, yet God was able to sustain them. Moreover, he made this insignificant race into a world power and all the nations feared them When Israel forgot its Creator and Protector, but trusted in their own might, God scattered them all over the earth. Here again we see the life giving power of God.

Jesus cursed a fig tree but later he told his disciples ' From the fig tree learn its lesson;as soon as its branch becomes tender and puts forth its leaves - you know that Christ is near, at the very gates. Mt.' 24:32. Long before, Ezekiel, the Prophet, in a vision, saw dry bones becoming people again Ez 37 :4 ff. This prophecy is being fulfilled today.

Soon after the first world war one, Jews strongly felt a need for a 'homeland' of their own. This can be seen in the statement of a dying father. The father asked his son to read an inscription. ' It is good to die for one's own country,' the inscription read. The dying father corrected it. 'It is better to have one's own country to die for.' The British Empire and the Arab world were opposed to the Jews. (refer Exodus by Leon Uris). No country was willing to help them. Some wealthy Jews bought some patches of marshy land from Arabs, reclaimed and settled the Jews there illegally because the British government did not approve of this. The settlers were then attacked by the jealous Arabs The old people shrunk back in fear. but the youth grew up into a militant group under the leadership of Ari Ben Canaan and started to attack their enemies This shocked the enemies of the Jews.

Then a miracle took place, according to Leod Uris. All the nations were not in favour of carving out a separate homeland for the Jews. But a miracle occurred overnight and on the day of voting at the U. N., America, its allies, Russia and its communist block, all voted in favour of a separate state for the Jews, and a new Nation was born. The dead fig tree was brought back to life again. The power of God is seen in the renewal of Israel's life.

The same God is able to give life to all those who lost the savour of life. All those who are dehumanized, trodden down and trampled on should draw near the life giving Lord. It is God who gives, the weak, maimed and the dying, the power to fight their oppressors. All what God xpects from us is to trust in the unlimitting power of God.

Let us therefore, trust in the life giving power of God and he will give us the power to liberate us from all forms of oppression.

WORDS OF WISDOM........

(Continued from page 1)

In the international affairs it is this situation of Hobbesian fear which, as far as I can see, has hitherto defeated all the endeavour of the human intellect. Not only may both sides feel utterly self-righteous, but where a great obstruction occurs both may feel utterly baffled and frustrated. Though one side may have more justice than another, in the particular occasion of a conflict, there is a sense in which war as such is in reality a judgement on all of us. The fundamental predicament would not exist if men in general were as righteous as the situation requires, and of course the fundamental predicament is itself so maddening and exasperating that men sometimes resort to desperate measures with an idea of cutting the Gordian knot.

### Licences for Radio Sets

The Tamil Eelam Administrative Service has given notice about the issue of licences to Radio Sets. They have notified that these licences have to be obtained before the 10th of June this year. For the first radio sets the licence fee shall be Rs. 50/- For every additional set a fee of Rs. 30/– shall be charged.

### Open Air Theatre at Araly

The members of the family of the late Rathy Sellappah constructed an Open Air Theatre in the Araly Church premises as a memorial for their parents. The Open Air Theatre was declared opened by our Bishop on Thursday the 27th April. The Public Meeting was presided over by the Rev. A. A. Paul. Speeches were made by The Rt Rev. D. J. Ambalavanar, Mr. D. S. Mathiyaparanam, worker-in-charge, Araly, Mr. T. Sathianathan and the Bishop.The Araly Church members gave refreshments to all those who participated at this function.

### Clergy Tranfer

A change has been made in the transfer slate of the JDCSI Workers. Mr. T. E. Ashokumar will take charge of our church of Kudathanai from the 1st of May 1995. Mr. N. T. Jeyanesan who is now serving at Kudathanai is transferred to our church in Delft.

### Dr. Robert Porter resumes work at Jaffna College

Dr. Robert Geoffrey Porter who was on furlough in his homeland returned to Jaffna last week by ship. He will resume work at Jaffna College when it re - opens for its third term on the 2nd of May, 1995. Dr. Porter has returned with many books and teaching aids for Jaffna College.

Registered as a News Paper at the G P. O. Sri Lanka. News Printed for the Jaffna Diocese of the Church of South India at the American Ceylon Mission Press. 182, 1st Cross Street, Jaffna on Friday the 05th of May 1995 and Published by Mr. G. Nadaraja, Diocesan office, Vaddukoddai.